**Editor's Note**

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' Uduvil, Chunnakam.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 29TH MAY, 1981 No. 22

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**Subscription**

Inland: Rs. 35/- per year.

Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*

**The Manager,**

'Morning Star', Vaddukoddai.

## Salvation Army Headquarters Complex

Commissioner John D. Waldron, Territorial Commander, Canada will inaugurate the Headquarters Complex at Galle Face on 6-6-81.

The new building is intended to house some 85 middle class working girls and living quarters for Salvation Army officials. The property was bought by the Salvation Army in the early twenties for a sum of Rs. 35,000. The value now runs into several million of Rupees.

The new building has been funded by the Salvation Army of Canada and Sweden.

Colonel P. W. Perera is now Territorial Commander in Sri Lanka. Mr. Mallory Wijesinghe is Advisory Board Chairman.

*DDC Election*

## The Jaffna District Electorates and DDC Elections

The following is the list of electorates in the Jaffna District and the total number of voters in each electorate.

*Kayts* — 40715; *Vaddukoddai* — 44914; *Kankesanthurai* — 48385; *Manipay*—45541; *Kopay*—47121; *Udupiddy* — 41211; Pt. Pedro — 32434; *Chavakachcheri* — 42221; *Nallur* — 45314; *Jaffna* — 40170; *Kilinochi* — 31388.

Total number of voters in the Jaffna District is 46,3414. There will be *425* Polling booths in the district. The highest number of voters in a Polling booth is at *Pashaiyoor* (Jaffna) (பாஷையூர்) which has 2146 voters. The least number of voters is 25 which is in a polling booth in Pt. Pedro.

The DDC Elections will take place in 17 Districts in the country. UNP candidates have already been elected in 7 Districts uncontested. The voting time will be 7 a. m. to 4 p. m.

*Personal*

## "Who is who in American Universities and Colleges (1981)

The 1981 Edition of the above publication has the name of a Sri Lankan girl. She is Prebha Thancharatnam of Uduvil who has recently graduated from Wilson College, Pennsylvania with Honours in English (*magnus cum laude*) and has been awarded the Academic Achievement Award at *Wilson*.

Prebha left for the States in 1978 and joined Chambersburg's Wilson College where she was sponsored by Mrs. Joann Snider, of Williamson, a missionary of the UCBWM who taught English at Uduvil Girls' College, 1976—1978.

Prebha was an outstanding student at Wilson College and her professor, in the school Alumnae Quarterly has stated that supervising her Honours thesis on *Hopkins* has been one of his "most rewarding experiences."

She is the daughter of Mr. T. Thancharatnam and Mrs. Thancharatnam of Uduvil. She arrives in Sri Lanka, on 19-6-81.

## Jaffna Diocese of the C. S. I. accepted as Member of the C. C. A.

At the Seventh Assembly of the Christian Conference of Asia (C. C. A.) formerly the East Asia Christian Council (E. A. C. C.) held in Bangalore from the 18th to the 28th of May, the Jaffna Diocese of the C. S. I. was one of the six Churches newly admitted as Member Churches of the Assembly. The other five are: one from Bangladesh, three from Indonesia and one from New Zealand.

There were seven delegates from Sri Lanka attending the Assembly of about 400 delegates. Four of them represented the National Christian Council of Sri Lanka and the other three, the Church of Ceylon. The Ceylon Methodist Conference and the Jaffna Diocese of the C. S. I. respectively.

*N. C. C.*

1. Shirley J. S. Peiris, General Secretary, N. C. C. (Anglican).
2. Rev. S. S. Arulampalam (C. S. I.).
3. Mrs. Myrtle Jeyaveerasingam (Methodist).
4. Miss Nelun Gunasekera (Anglican).

*Churches*

5. Rev. Duleep Fernando (Methodist).
6. Ven. J. J. Gnanapragasam (Church of Ceylon).
7. The Rt. Rev. D. J. Ambalavanar (Jaffna Diocese, C. S. I.).

The Rev. A. C. Mathanaraj of the Jaffna Diocese attended as an N. C. C. delegate to the Asian Ecumenical Course which ran parallel to the Assembly in Bangalore.

The following from Sri Lanka have been elected to serve on the various Commissions and Committees of the C. C. A. for the next quadrennium.

1. Committee on Mission & Evangelism - The Rev. S. S. Arulampalam.
2. Committee on Communications—The Rev. Wesley Jeyaseelan.
3. Committee on Youth—Miss Nelun Gunasekera.
4. Committee on Women—Mrs. M. Jeyaveerasingam.
5. Committee on Development & Service—The Rev. Kenneth Fernando.
6. Committee on Urban & Rural Mission—Mr. S. A. Coilpillai.

The Rt. Rev. Lakshman Wickremesinghe, Bishop of Kurunegalle was elected to represent Sri Lanka on the General Committee of the C. C. A for the next quadrennium.

*Comment*

## Mission in the Third World

Though there are personnel available in the Third World, due to lack of financial resources they are not able to send or share them with Churches in other lands. They do not have, as in the West the benefits of the long established structures for screening and training of personnel for mission.

Although the internationalisation of missionary personnel has been talked about for over two decades, hardly any headway has been made and generally each Western Mission Board and Society is interested in only sending its own members to a Third World country.

Unfortunately the present one way traffic of missionaries from the west to the Third World has had a few negative consequences Unconsciously there is a false assumption that the Western Missionaries and those that support them are more spiritual and committed and superior to the Christians of the Third World.

The colonial myths are unwittingly perpetuated in this way. There is also a "we are all right" attitude and a smugness which has made the people to take mission as something which is relevant only to the Third World.

There are people of exceptional abilities not only in the West but also in a poor undeveloped country. In the secular international organisations, people of different nationalities play crucial roles.

There is a false assumption that the Churches in the Third World would be deprived if the available people are sent as missionaries from these to the other countries.

God in his mercy has blessed his people in different lands with varieties of gifts......... A self-satisfied Church is a deprived Church and the tragedy is that it does not even know its loss.

*The South India Churchman April 1981*

## Scope of DDC

*Development Councils* will have the power to prepare Development Plans in regard to the following 15 subjects :— Agrarian services, agriculture, animal husbandry, co-operative development, cultural affairs, Education, Employment, Fisheries, Food, Health Services, Housing irrigation works, Land use and Land settlement, Rural development and small and medium scale industries.

The Development Council has no power to interfere in the affairs of a Municipal Council in the District.

## Death of Former M. P. for Vaddukoddai

We regret to record the death on Sunday (24-5-81) of Mr. A. Thiagarajah, former M. P. for Vaddukoddai under the SLFP government and now the first in the the list of UNP nominees for the Jaffna District at the District Development Councils Election to be held on 4-6-81.

Mr. Thiagarajah was shot at by an unknown gunman on Sunday and seriously injured after an election meeting at Mavady, Vaddukoddai. He died at the Jaffna Government Hospital after an emergency operation.

Fisheries Minister Mr. Festus Perera, Mr. Harsha Abeyawardene, UNP General Secretary and the Prime Minister, Mr. R. Premadasa were among these who came from Colombo for the funeral.

Mr. Thiagarajah before he entered politics had a great career in Education. He was Principal of Karainagar Hindu College and retired from service to contest the Vaddukoddai seat in Parliament which he won.

Mr. Premadasa, the Prime Minister in his funeral oration on Thursday (28-5-81) described him as a man of Peace who worked hard for the welfare of others. His message of unity and brotherhood will, the Prime Minister said, be remembered for ever in this country.

Mr. A. Amirthalingam, the Secretary General of the TULF and Leader of the Opposition issued a joint statement with Mr. M. Sivasithamparam, President of the TULF categorising the shooting as "meaningless violence" which would only aggravate the hardships and problems of the Tamil people.

All schools in Jaffna were closed on Thursday (28-5-81) as a mark of respect for an eminent educationist whose career as teacher and Principal spanned more than three decades.

*IN BRIEF*

- *A/L O/L Examinations* From 1982, the AL Examination will be held only in April. 250,000 candidates are expected to sit the August AL Examination (New Syllabus) this year which begins on 10-8-81. The G. C. E. (O L). Old Syllabus Examination will be held concurrently with the AL Examination in August. This will be the last OL Examination on the Old Syllabus.
- *Asia Sunday 1981* A Special Service to be held at the Fab Church, Jaffna at 5 p. m. will mark Asia Sunday on 31-5-81. Asia Sunday this year is of special Significance as falling immediately after the Seventh Assembly of the CCA at Bangalore which concludes on 28-5-81.

The Rt. Rev. D. J. Ambalavanar, the Bishop of the JDCSI will be the Celebrant at the Holy Communion Service. Rev. S. D. Horshingston, the Archdeacon of Jaffna will preach the Sermon.

᪀
# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

" நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம் "

மலர் 141 ] 29 — 5 — 1981 [ இதழ் 22


## இயேசு இராஜா

பகைவரினுற் பிடிக்கப்பட்டுப் பாதகன் என்ற போலிக் குற்றச் சாட்டிற் கொல்லப்பட்ட இயேசு இவையாவும் நடந்த சில நாட்களிலேயே தம் சீடரைப் பார்த்து: **வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது** என்ருர். அதை ஆதாரமாகக் கொண்டே அவர்கள் ஆற்ற வேண்டிய பணியை அவர்களுக்கெடுத்துரைத்தார்: **சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் ........ ஞானஸ்நானம் கொடுங்கள் ............ நான் போதித்தவைகளைக் கைக்கொள்ளும்படி உபதேசியுங்கள் ........ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்.** அவர் கொடுத்த இப் பணியின் விசாலத்தை நாம் கணக்கிட்டால் அதற்குரியதாய் அவருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் அளவையும் அதன் நித்திய தன்மையையும் கூட நாம் காணலாம்.

"அதிகாரம்" பலருக்கும் உரியவொன்று. உயர்மட்டத்தில் அரசருக்குரிய வொன்ருய் அதைக்கருதுவோம். நீதி, நியாயம் என்ற போர்வையில் ஒருவரின் உயிரை நீக்கும் அளவிற்கும் அவ்வதிகாரம் நீடிக்கும் தன்மையுடையது. அப்பேர்ப்பட்ட ஒரு அதிகாரமே ஆண்டவரின் உயிரைப்போக்க உதவியது. அது ரோம சாம்ராட்சிய ராயன் பாலிருந்தது. பிலாத்து ஒருவகையிலும் பிரதான ஆசாரியர் இன்னெருவகையிலும் கீழ்மட்ட அதிகாரம் கொண்டவர்கள்; அவர்களும் அவற்றைப் பிரயோகித்தே ஆண்டவரைச் சிலுவை மரமேற்றினர்; செய்யவேண்டியதைச் செய்தாயிற் றென்றனர். அந்த மட்டுந்தான் அவர்கள் அதிகாரம் செல்லும் தரமானது.

தமது அதிகாரத்திற்கும் மேலானவோர் அதிகாரம் உள்ளதென ரோமராயன அறியாது போயிருக்கலாம்; யூத அதிகாரிகள் அறியாமற் போவதற்குச் சாட்டுப் போக்கு எதுவுமே இருக்கவில்லை. ஆட்சி செய்யும் கடவுளைப் பற்றி அவர்கள் அறிந்திருக்க வேண்டுமே. அவருடைய அதிகாரத்திற்கும் தாம் கொண்ட அதிகாரத்திற்குமிடையிற் கண்ட வேறுபாட்டையும் அவாகள் உணர்ந்திருக்க வேண்டுமே: அது நித்தியமானது; ஒரு நித்திய நோக்கமுடையது; காலம், இடம் என்ற மட்டுப் படுத்தலின்றிக் கிரியை செய்ய வல்லது. அதை அவமாக்க எவராற் கூடும?

அதை அவமாக்குவது அரிதென்பதற்குச் சரித்திரமே சாட்சி. தமது அதிகாரத்தைக் கொண்டு தாம் கொலைக்குட்படுத்திய ஒருவர், தமது அதிகாரத்திற்குப் பலியாய்த் தம் உயிரைக் கொடுக்கவே வேண்டியவர்போற் கண்ட ஒருவர், அதைக் கொடுத்த பின்னும் எழுந்து நின்று சொல்கிருர்: சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இராயனின் அதிகாரம் எங்கே? பிலாத்துவின் அதிகாரம் எங்கே? யூதமதஅதிகாரிகள் அதிகாரம் எங்கே? கணக்கிட்டுக் கூறக் கூடிய ஆண்டுகளில் அவை அழிந்துபட்டுப்போயினவே.

சரித்திரம் சாட்சி யென்ருேம்; அது போதாது. உலக அதிகாரங்களுக்கு மாண்டழிந்து போனவர் போற் காணப்பட்ட ஆண்டவர் பெற்றுக் கொண்ட அதிகாரத்தின் செயற்பாடே சரித்திரமாயமைகிறது. கி. பி, அல்லது கிறிஸ்துவுககுப் பின் எனக் காலத்தைப் பிரித்து வைத்துக் கூறுவதும் அதனுற்ருனே! கி. பி. சதாகாலமும் அவர் அதிகாரம் நீடிக்கும். என்பதுமே பொருத்தமாகும்.

இதை அடிப்படையாய்க் கொண்ட சிந்தனைகளையே நமது சபைகள் நேற்றையத தினம் கொண்டிருக்கும். ஆண்டவரின் பரமெழற் திருநாளைக் கொண்டாடிய அனைவரும் நித்தியமாய்ப் பரமிருந்து ஆட்சி செய்யும் பரமனுய் அவரைத் தொழுதிருப்பர்; அவர் ஆட்சி உலகை ஆட்கொள்ள வேண்டுமெனக் கேட்டிருப்பர். அதைத் தினமுமே நாம் கேட்க வேண்டும்; ஏனெனில் உலகிலே சமாதானம், சந்தோஷம், செழிப்பு வளர, மக்கள் நல்வாழ்வு பெற்று வாழ, அவராட்சி மட்டுமே வழிவகுக்கும்.

மனிதருடைய விவகாரங்களில் எவ்வித அதிகாரமாவது வகிப்பவர்களும் கூட இதைக் கண்டறிவதும் உணர்வதும் அவசியம். ஏனெனில் லோகார்த்த அதிகாரம் நிலைநிற்கும் ஒன்றல்ல; அதிலே வாழ்வைக் கட்டியெழுப்பத் துணிவது புத்திசாலித்தனமுமல்ல — இதற்கு உலக வரலாறு சாட்சி கூறும். அன்பும் அருளும், அவற்றினுல் மட்டுப்படுத்தப் படும் அதிகாரமுமே, இறைவன் நம்மிடமிருந்து கேட்பவை. அவர் ஆட்சிக்கு ஆதாரமும் இவைகளே.

அவர் ஆட்சி புரிகிருர் என்ற நிச்சயத்தை நாம் கொண்டிருப்பதால் மலைகள் சமுத்திரத்திற் றள்ளுண்டு போனுலும் சமுத்திரந்தான் கரை புரண்டோடினுலும் நாம் பயப்படோம் எனக் கூறும் தைரியத்தை நாம் பெறுகிறோம். அங்கலாய்ப்படையச் செய்யும் எவ்வித நிலைகளின் மத்தியிலும் கூடக் கிரியை செய்யும் அவர் கரத்தின் செயலை நாம் பார்த்த வண்ணம் விசுவாசித்திருக்கிறோம்.

## மின்வெட்டு நேர அதிகரிப்பு

போதிய மழையின்மையால் மௌசாக்கெல்ல, காஸில்றி நீர்த்தேக்கங்களில் நீர் மட்ட அளவு மிகவும் குறைந்து போனதின் நிமித்தமாக, சென்ற பெப்ரவரி கடைப் பாங்கிலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள மின் வெட்டு நேரம் வெள்ளிக்கிழமை 29ஆம் திகதியிலிருந்து அதிகரிக்கப்படவுள்ளது. ஏற்பட்ட நெருக்கடி நிலையையிட்டுக் கூட்டப்பட்ட மின்சக்தி அமைச்சின் உயர் உத்தியோகத்தரின் அவசரக் கூட்டமொன்றில் இதைப் பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

அமுலில் இருந்து வரும் 5½ மணி நேர மின் வெட்டு 8 மணி நேரத்திற்கு அதிகரிக்கப்படவுள்ளது. முற்பகல் சில மணிகளுக்கும் பிற்பகல் தொடக்கம் இரவு வரையிலான சில மணி நேரங்களுக்கும் இம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுமெனத் தெரிகிறது. எனினும் அத்தியாவசியச் சேவைகளுக்கு — முக்கிய பாதுகாப்பு அலுவலகங்கள், வைத்திய சாலைகள், புதினப் பத்திரிகைக் காரியாலயங்கள் முதலியவைக்கு — தொடர்ச்சியாக மின் சக்தி வழங்கப்பட்டுக்கொண்டிருக்கும்.

பருவ மழைகள் வரும் கோலம் கண்டதால் ஒரு சந்தர்ப்பத்தில் இந்த மின்வெட்டு அதிகரிப்பைப் பின்போட்ட மின்சக்தி உற்பத்தித் திணைக்களம், மழைகள் காத்திருப்பின்படி வராத காரணத்தால் வெள்ளிக்கிழமை தொடக்கமாக இதைக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளது. முதல் ஒழுங்கின்படி இந்த அதிகரிப்பு 25ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகியிருக்க வேண்டியது. புதிய ஒழுங்கின்படி கொழும்பில் காலை 6-00 தொடக்கம் 9-30 மணி வரையும் சாயந்தரம் 3-00 தொடக்கம் 7-30 மணி வரையும் மின் வெட்டு இருக்கும்.

சுன்ணுகம் உப மின் நிலையத்திஞற் சேவிக்கப்படும் இடங்களில் மின்வெட்டு முற்பகல் 10-15 தொடக்கம் பிற்பகல் 4-15 வரையும் இரவு 8-30 தொடக்கம் 10-30 வரையும் நீடிக்கும்.

## வேட்பாளர் படுகொலையின் எதிரொலி

முன்னுட் பாராளுமன்ற அங்கத்தினரும், நடைபெறவிருக்கும் மாவட்ட அபிவிருத்திச் சங்கத் தேர்தல்களில் யாழ். மாவட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சி முதலாம் வேட்பாளருமான திரு. அ. தியாகராஜா சென்ற ஞாயிற்றுக் கிழமை மூளாயில் நடந்த ஒரு தேர்தற் பிரசாரக் கூட்டத்தில் பேசிவிட்டுத் திரும்பியபோது கூட்டத்திலிருந்த ஒருவரினுற் சுடப்பட்டார். யாழ். அரசாங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் பல அவசரச் சத்திர சிகிச்சைகளின் பின் திங்கட்கிழமை இரவு காலமானுர்.

இப்பயங்கரத் தாக்குதலைத் தொடர்ந்து நாடு பூராவும் உள்ள தேர்தல் வேட்பாளர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கும்படி காவற்றுறைத் தலைமையகம் எல்லா மாவட்டக் காவற்றுறைப் பிரிவுகளையும் கேட்டுள்ளது. தேர்தலின் பொருட்டு மே மாதம் 30ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்த எல்லாப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன் போடப்பட்டுத் திங்கட்கிழமை தொடக்கமாகவே ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்திற்கு மேலதிகமாக இருநூறு காவற்றுறை உத்தியோகத்தர் அனுப்பப்பட்டதுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் சுமார் 1000 உத்தியோகத்தர்களும் அனுப்பப் பட்டுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

திரு. தியாகராஜாவின் மரண இறுதிச் சடங்குகள் அவர் வசிப்பிடமான காரைநகரில் நேற்றைய தினம் நடைபெற்றது. அச்சமயம் இரங்கலுரை வழங்கிய பிரதமர் பிரேமதாசா அவர்கள் பிரச்சினைகளுக்குத் துப்பாக்கி விடைதராதெனக் கூறி, நட்புக் கரம் கொடுத்துத் தம்முடன் சேர்ந்துகொள்ளும்படி மக்களைக் கேட்டுக்கொண்டார்கள்.

## நற்செய்திப் பணி

— அருள்திரு. ஜே ஜே. இரத்தினராஜா —
(முற்றுெடர்ச்சி)

**இயேசு கிறிஸ்து வழி**

அவரால் அன்றி ஒருவரும் கடவுளிடம் வரமுடியாது. சந்திகளில் வழிகாட்டி மரங்கள் நிற்கின்றன. யாழ்ப்பாணத்தில் ஒரு சந்தியில் இவ்விதமான ஒரு மரத்தில் ஒரு பலகையில் "கண்டி" என்று எழுதியிருக்கும். அதைப் பார்த்து விட்டு ஒருவர் அந்த வழியாகச் சென்ருல் வேறு பல வழிகாட்டி மரங்களைப் பார்த்து கண்டி போய்ச் சேரலாம். ஆனுல் "கண்டி" என்ற பெயருடைய அந்தப் பலகை இருக்கும் மரம் அங்கேயே நிற்கும். அது கண்டி அல்ல அது கண்டிக்குப் போகும் வழியைக் காட்டும் மரம் ஆனுல் இயேசு அப்பேர்ப்பட்ட வழிகாட்டியல்ல, அவர் அங்கேயே நிற்கிறவர் அல்ல. அவர் எங்களோடு வருகிறவர். அவரே வழியும், சத்தியமும்.

**சுவிசேஷத்தைப் பிரசங்கியாவிட்டால்?**

பவுல் அடியார் "சுவிசேஷத்தைப் பிரசங்கியா விட்டால் எனக்கு ஐயோ" என்கிருர். ஒரு கிறிஸ்தவன் சுவிசேஷத்தைப் பிரசங்கியாமல் இருக்கமுடியாது. ஆனுல் கூருமலும் பலர் இருக்கிருர்கள் அப்படியானுல் 'சுவிசேஷம் இல்லை என்றதல்ல. நாம் கிறிஸ்தவர்களல்ல என்பதே. அன்ெருருவர் தன் பிள்ளைகள் சில கறி உணவுகள் சாப்பிடுவதில்லை என்று எனக்குச் சொன்னுர். அப்படியானுல் அந்தக் கறிகளையே செய்து அதையே சாப்பிடவேண்டுமெனக் கூறினுல் சாப்பிடத்தானேவேண்டும் என நான் கூறினேன். அவர் கூறியது, "அப்படியென்ருல் என்பாடு என்ன? எனக்கு அந்தக்கறிவகை விருப்பமில்லையே". சுவிசேஷத்தை இவ்விதம்நாம் கூறமுடியாது. எனக்கு உதவாத நற் செய்தி மற்றவனுக்கு உதவாது.

**கூற முடியாத காலமும் வரும்**

எட்டுவருட காலம் மலேசியா நாட்டில் ஊழியம் புரிந்த பொழுது நான் அடைந்த அனுபவங்களில் மிகப் பெரியது இது. அங்கு அரசாங்க மார்க்கம் இஸ்லாமியம. ஒரு இஸ்லாமியனுக்குக் கிறிஸ்த மார்க்கத்தைப்பிரசங்கிக்கவோ, அவனை மதமாற்றம் செய்யவோ முடியாது என்றது சட்டம். ஆகவே எனது ஊழியம் ஒரு எல்லைப்படுத்தப் பட்டதாயிருந்தது. சுயாதீனமாக சுவிசேஷத்தைப பிரசங்கிக்க முடியவில்லை. அந்தக்காலத்தில் தான் இங்கு இலங்கையில் இது விடயத்தில் நமக்கிருக்கும் அரும் சலாக்கியத்தையும், சுயாதீனத்தையும் இன்னும் அதிகமாக உணர்ந்தேன். இங்கிருக்கும் நாம் இதைப் பிரயோசனப்படுத்துகிருேமா? தருணம் இன்று உண்டு. ஆனுல் இது இல்லாமல் போகக்கூடும்.

# ஆண்டவரின் அடியவர்கள்

(முற்தொடர்ச்சி)

**வானொலிச் செய்தி:**

இன்றையச் சூழலுக்கு இது முக்கியமான பணியாகும். ஆனால் பல நிகழ்ச்சிகளும் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே புரியும். இந்துக்களும், இஸ்லாமியரும் கூட விரும்பிக் கேட்குமளவில் தரமான பாடல்களையும், தெளிவான நற்செய்தியினையும் ஒலிபரப்புதல் நல்லது. கூடுதல் விளம்பரங்களைத் தவிர்க்கவேண்டும். "உங்களுக்காக ஜெபிக்க வேண்டுமா? எங்களுக்கு எழுதுங்கள். இன்னார் உங்கள் பிரச்சனைகளைத் தன் பிரச்சனைபோன்று பாவித்து ஜெபிப்பார்" என்று திரும்பத் திரும்பக் கூறுவதைச் சகிக்கவே முடியவில்லை. இந்த பரிசுத்தமான பணி இன்று அரசியல், வியாபாரத் துறையாக மாறிவிட்டது பெருத்த வேதனையைத் தரும் ஒன்றாகும். இதனால் மக்கள் பிரசங்கியாருக்கு எழுதுவதோடு தங்கள் கடமை முடிந்துவிட்டது என்று எண்ணுகிறார்கள். "எங்களுக்காக ஜெபியுங்கள்" என்று மக்களைக் கேட்பவர்கள் மிகக் குறைவு. புனித பவுல் அடிக்கடி தனது நிருபங்களில் "எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்" என்று மக்களைக் கேட்டுக் கொண்டார். தனது பிரச்சனைகளையும், பெலவீனங்களையும் கூட அவர் மக்களிடம் வெளியிடத் தயங்கவில்லை. இன்று மக்களிடம் 'எழுதுங்கள்' என்று மட்டும் கூறுவதைவிட பிரசங்கியாரும் தனது பிரச்சனைகளை மக்களிடம் எடுத்துக் கூறி "எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்" என்று கேட்பது எத்தனை மகிழ்ச்சி கட்டிட வேலை முடிய ஜெபியுங்கள், காணிக்கை அனுப்புங்கள் என்று மட்டும் கேட்டால் போதாதல்லவா?

**அற்புதங்கள்:**

மக்களைக் கூட்டிச் சேர்ப்பதற்கு இவ்வாறு விளம்பரப்படுத்துவது நல்ல கருவியாக எண்ணப்படுகிறது. இது வேதபோதனைக்கு முரணானதாகும். அற்புதங்களை விளம்பரப்படுத்தி, முன் ஒழுங்கோடு இயேசுவோ அவரது சீடர்களோ அற்புதங்கள் செய்யவில்லை, அற்புதங்களை நம்பி தன்னைப் பின் பற்றியோரை இயேசு கண்டித்தார். கண்டு விசுவாசிப்பவர்களை விட காணாமல் விசுவாசிப்போரே பாக்கியர் என்று போதித்தார்.

ஆவிக்குரிய வரங்களில் குணமாக்கும் வரமும் ஒன்று என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் இந்த வரம் மிக பக்தி விநயத்துடனும் ஒழுக்கத்துடனும் செய்யப்பட வேண்டும். இதற்கு 'இந்தியாவின் பவுல் அப்போஸ்தலன்' என்று அழைக்கப்பட்ட சாது சுந்தர் சிங்கின் வாழ்க்கையிலிருந்து ஓர் எடுத்துக்காட்டைத் தர விரும்புகிறேன். அவர் குணமாக்கும் வரமுடையவர். அவரது பார்வையிலேயே அந்த வரம் செயல்பட்டது. வேத புத்தகத்தைக் கிழித்துத் தீயில் எறிந்த தனது கரங்களை யாருடைய தலையின் மேலும் வைக்கமாட்டேன் என்று அவர் தீர்மானம் செய்திருந்தார். அவர் இலங்கைக்குச் சென்றிருந்தபோது மருத்துவ மனையில் மரணத் தருவாயில் இருந்த ஒரு பையனைச் சந்தித்து அவனுக்காக ஜெபிக்கவே அவன் பிழைத்துக் கொண்டான். அற்புதகரமாக அவனது நோய் திடீரென மறைந்துவிட்டது. எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். இச்செய்தி எங்கும் பரவியது. உடனே மறுநாளிலிருந்து சுந்தர் சிங் தங்கியிருந்த அறையில் மக்கள் கூட்டம் பெருகியது. பரிசுப் பொருட்கள், காணிக்கைகள் குவிந்தன. அப்போது இயேசுவை விட மக்கள் தன்னை நம்புவதாகக் கண்ட சுந்தர் சிங் "ஆண்டவரே எல்லா சிலுவைகளையும் என்னால் சுமக்க முடியும்; ஆனால் இந்தச் சிலுவையை என்னால் சுமக்க முடியாது. தயை கூர்ந்து இந்தக் குணமாக்கும் வரத்தை என்னை விட்டு எடுத்துவிடும்" என்று ஜெபம் பண்ணினார். அன்றிலிருந்து அந்த வரம் எடுக்கப்பட்டது. கடவுளின் செய்தியைப் பணிவுடனும், பாடுகளுடனும் பகிர்ந்து கொண்ட அவர் இந்தியக் கிறிஸ்தவராக வாழ்ந்து ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆழ்ந்த தியானத்தின் ஆற்றலினை எடுத்துக் காட்டினார்.

அற்புதங்களில் பெரியது வாழ்க்கை மாறுவதாகும். வேல்ஸ் நாட்டில் எழுப்புதல் ஏற்பட்ட போது காவல் நிலையங்கள், புகைவண்டி நிலையங்கள், நீதி மன்றங்கள் ஆகியவற்றிற்கு கடிதங்கள் குவிந்தன. திருடினவர்கள் அதனை இரு மடங்காகத் திரும்பச் செலுத்தினர். ஓசிப் பயணம் செய்தோரும் அப்படியே செய்தனர். வழக்குகள் வாபஸ் செய்யப்பட்டன. இதுவன்றோ சிறந்த அற்புதம்? மாறாக இன்று மக்கள் பிரசங்கியாருக்குக் கடிதம் எழுதுவதோடு திருப்தியடைந்து விடுகின்றனர். வேல்ஸ் போன்ற எழுப்புதல் நம் நாட்டில் ஏற்பட கடவுள் அருள் செய்வாராக.

(தொடரும்)

## யாழ்ப்பாணக் குரு சங்கம்

இவ்வாரத்தின் செவ்வாய்க்கிழமை, 26ஆம் திகதி, யாழ்ப்பாணக் குரு சங்கம் அச்செழு மெதடிஸ்த சபைக் குருஸ்தானத்தில் கூடியது. விசேட பேச்சாளராக யாழ்ப்பாணச் சர்வகலாசாலை விரிவுரையாளர் திரு. சிலன் கதிர்காமர் அவர்கள் சமுகமாயிருந்தனர்.

இலங்கைத் திருச்சபை அத்தியட்சர் பேரருட் திரு. சுவிதின் பெர்ணன்டோ அவர்கள் யாழ்ப்பாணப் பிரதம குரு வண. சாம ஹேரசிங்டன் அவர்களின் உதவியுடன் ஆரம்பத் தியான ஆராதனை நடத்தினார்கள். குரு அபிஷேக ஆராதனை ஒழுங்கிலிருந்து ஓரிரண்டு வாக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு அருளுரை ஆற்றிய அத்தியட்சர் அவர்கள் குருமார் பல்வேறு பணிகளையும் மேற்கொள்ள வேண்டிய கடவுளின் தூதுவரும், காவற்காரரும், உக்கிராணக் காரருமாயிருக்கிறார்கள் எனக் காட்டி அவர்கள் அறியாதிருப்பினும் அநேகர் அவர்கள் மேற் தங்கியுள்ளார்கள் எனவும் கூறினார்கள். தங்கள் மகத்துவமான அழைப்போடு சம்பந்தப்பட்ட பல பணிகளையும் நிறைவேற்ற அவர்கள் தூய ஆவியினால் தூண்டப்படவும் வேண்டுமென்றார்கள்.

மனித உரிமைகளைக் குறித்து உரை நிகழ்த்திய திரு சிலன் கதிர்காமர் அவர்கள் இவ்வுரிமைகள் பறிபோன பல சந்தர்ப்பங்களை விவரித்து உலகிலே சுமார் 5000 பேர் வருட வீதம், பிரதானமாக அரசியல் விடயங்களிற் சிக்கினவர்களாய்க் காணாமற் போகிறார்கள் என்றனர் திருச்சபையின் பங்கை விவரித்த பேச்சாளர், திருச்சபை மனித உரிமைகளுக்காக வாதாடும் முதன்மையான நிறுவனமாய் உள்ளதினால் உலகின் பல பாகங்களிலும் மக்கள் அதன் உதவியைப் பார்த்த வண்ணம் இருக்கின்றனர் என்றார்கள். 1948ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஐ. நா. மனித உரிமைகள் சாதனத்தின் விசேட அம்சங்களையும் எடுத்து விளக்கினார்கள்.

அத்தியட்சர் அவர்களின் செபம், ஆசீர்வாதத்துடன் இக் குரு சங்கக் கூட்டம் முடிவடைந்தது

## செய்திகளின் சாரம்

### தொழிற்சாலைகளை மூடுக

நாட்டில் நிலவும் மின்சக்தி நெருக்கடி நிலையைத் தொடர்ந்து, தமது தொழிற்சாலைகளைச் சில தினங்களுக்கு மூடி விடும்படி தனியார் நிறுவனங்களுக்கு அரசாங்கம் ஒரு கோரிக்கை விடுத்துள்ளது. அரசாங்கமும் தனது துணி உற்பத்திச் சாலையையும் அதன் கிளைகளான 72 மின்தறி நிலையங்களையும் அரசாங்கத்தின் 12 கூட்டுத் தாபனங்கள் நடத்தும் தொழிற்சாலைகளையும் மூடி விடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

* * *

### மன்னார் — புதிய மறைமாவட்டம்

புனித பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் இலங்கையில் மன்னாரப் பகுதியை ஒரு புதிய தனிப்பட்ட மறைமாவட்டமாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்கள். இது மன்னார், வவுனியா ஆகிய இரண்டு அரசியல் மாவட்டங்களையும் உள்ளடக்கும். இதன் முதலாவது ஆயராக அருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்

* * *

### சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு

சிங்கப்பூரின் கட்டட ஒப்பந்தக்காரர் சங்கம் கட்டடத் தொழிலாளர் தட்டுப்பாட்டின் நிமித்தமாகப் பிற ஆசிய நாடுகளிலிருந்து சுமார் 30,000 தொழிலாளரை அழைப்பதற்கு அரசாங்கத்தின் அனுமதியைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. அனுமதி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கிடைக்கும் பட்சத்தில் இலங்கையரிலும் அநேகருக்கு அங்கே வேலைவாய்ப்புக் கிடைக்கலாம்.

* * *

### பல் சிகிச்சை நிலையங்கள்

நாடு முழுவதிலும் தற்பொழுது 175 பாடசாலைப் பல் சிகிச்சை நிலையங்களேயுள்ளன. இது அதிகமான அளவு அதிகரிக்கப்பட வேண்டும். பல் சிகிச்சைத் தாதியர் பயிற்சி நிலயம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசிய சுகாதார அமைச்சர் இனிமேல் ஒவ்வொரு வருடமும் சுமார் 25 புதிய பாடசாலைப் பல் சிகிச்சை நிலையங்களைத் திறக்கக் கூடியதாயிருக்குமெனக் கூறினார்கள்.

# புதிய சீனாவில் புத்துயிர் பெறும் திருச்சபை

(முற்தொடர்)

"நாம் கடவுளிடம் கிட்டிச் சேரும்போது பயத்துடன் அல்லாமல் அன்புடன் சேர வேண்டும், பயத்தின் அடையாளங்களாவன — (1) மனச் சமாதானமின்மை; (2) ஐயுறவு; (3) கோழைத்தனம்; (4) பாவத்திற்காய் நியாயம் தீர்க்கப்படும் அச்சம்; (5) கடவுளின் தன்மை பற்றிய தப்பு நோக்கம். மறுப் பக்கமாகக் கடவுளிலேயுள்ள உண்மை அன்பின் அடையாளங்கள் ஆவன — (1) உள்ளிற் சமாதானம்; (2) விசுவாசம்; (3) தைரியம்; (4) சேவை செய்வதில் மனச் சம்மதம்.

கடவுளில் அன்பு பாராட்டுதல் என்றால் நாமாகவே அவரைக் கிட்டிச் சேருதல் — அவரைக் கிட்டிச் சேர விரும்புகிறோம், பயத்தினாலுமல்ல, கட்டாயத்தினாலுமல்ல, கைம்மாறு (லஞ்சம்) கிடைப்பதினாலுமல்ல; அவரை நேசிப்பதினால் அவரிடம் போகிறோம்.

அமெரிக்காவின் ஆலயங்களிலே குளிரூட்டும் சாதனங்கள், ஆர்கன் வாத்தியம், வேறு பிற வசதிகள் அனைத்தும் இருக்கின்றனவாம். எனினும் குருவானவர் தொலைபேசியிலே சபையாருடன் தொடர்பு கொண்டு, பல வகையான தூண்டுதல்களும் அளித்து ஆலயத்திற்கு வரும்படி கெஞ்சிக் கேட்க வேண்டுமாம், நமக்கோ குளிரூட்டப்பட்ட கட்டடங்களும் இல்லை; ஆர்கன் வாத்தியங்களும் இல்லை; அனலூட்டும் சாதனம் கூட இல்லை; ஆயினும் நமது உள்ளத்திலே ஆவியின் அனல் இருக்கிறது. இது அவசியம், கடவுளை நேசித்து, சில வேளை அவருடன் தங்கியிருந்து, அவருடன் உயிருள்ள உறவு கொண்டிருக்க வாஞ்சிப்பதினாலேயே நாம் அவரிடம் வருகிறோம்."

அடுத்த செவ்வாய்க்கிழமையன்று கனம் வென்டல் கார்சன் அவர்கள் ஷாங்ஹாய் புரொட்டஸ்தாந்து மூன்றம்சச் சுய வாழ்வியக்கத்தின் தலைவர்கள் ஆறு பேருடன் 2½ மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். [மூன்றம்சச் சுய வாழ்வியக்கம் The Three Self Movement என்பது சுய ஆட்சி, சுய தாபரிப்பு, சுய விருத்தி ஆகிய அம்சங்களைக் கடைப்பிடிக்கும் திருச்சபை இயக்கம்]. இப்பேச்சு வார்த்தைகளிலிருந்து பின்வருமாறு காணப்பட்டது:

ஷாங்ஹாய் பத்து மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றிலும் ஒரு மூன்றம்சச் சுய வாழ்வியக்கம் கடமையாற்றுகிறது. மூன்று ஆலயங்கள் (இந்நகரில்) திறந்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஆறு ஞாயிறு ஆராதனைகள் நடைபெறுகின்றன. சமுகமளிப்போர் தொகை சுமார் 9,000, ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்வோருக்காகவும் ஏழாம் நாள் அனுசரணைக்காரருக்காகவும் வெள்ளிக்கிழமை மாலையிலும் ஆராதனைகள் நடைபெறுகின்றன. (1980) வருட முடிவுக்கு முன் இன்னும் இரண்டு ஆலயங்கள் திறந்து வைக்கப்படலாமெனக் காத்திருந்தனர். ஷாங்ஹாய் வட்டாரத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த குருமார் தொகை 50.

(தொடரும்)

*EDITORIAL*

## D D C Focus

"*If we could first know where we are and whither we are tending, we could better judge what to do and how to do it*".

These words have been attributed to Abraham Lincoln, the 16th President of the United States of America who directed the turbulent forces of the Civil War "not to abolish slavery", as he claimed, "but to preserve the Union".

If the object of setting up Development Councils in Sri Lanka is *not* merely to find a solution to the outstanding problems of the Tamil speaking people but also to forge national unity in the country, then it is imperative that we have the "contemplation of an end" towards which we are moving and a clearer vision of our intended goals.

Unfortunately, our propoganda meetings and seminars on development councils have given us the impression that we are, as a nation entrapped in a vicious circle of self-accelerating problems and remedies.

Although President Jeyawardene has, on more than one platform said that democratic processes will always be held inviolate in this country, some of our leaders seem to display in their speeches perhaps unwittingly, their pre-occupation with the task of ensuring their continuance of their ideologies through DDCs.

Speaking at a propoganda meeting one of the speakers is reported to have warned the people of the district against voting for any party (at the DC elections) which ideologically does not see eye to eye with the ruling party.

If the people do not heed this warning, the first casualty, according to the speaker will be "development" in their District.

As against this accent on the political ideology of the party directing development as a major factor in the success of the development thrust, another speaker made an appeal to the people to eschew all political ideologies for the moment and just cast their vote for the party currently involved in massive development in the country.

Both these views appear to us to be naive approaches to the problem. If development in the Northern and Eastern provinces is to be spear-headed by only the ruling party, the appointment of the Presidential commission on *Devolution* was unnecessary.

So, was perhaps the critical and scornful attitude taken up by our present leaders towards the administration of local bodies, during the heyday of the SLFP regime, when a console of push buttons from a Colombo Secretariat directed local government departments through "special commissioners" as king pins of the local administration.

It is also a naive philosophy to divorce 'politics' from 'development. All development issues today are political issues. As Pope John Paul II once put it, "*the arduous struggle in the world today is for daily bread and social justice*".

DDC polemics in Sri Lanka should perforce take into account the masses of the country honest folk, born and bread as Charles Dickens would say "in a visible manner" who cannot be expected to grasp any truth other than that what is *really true*.

As for the Left Parties, handicapped by low morale we can understand their partiality for the negative approach of a boycott of the elections, quoting Nepal as a contemporary example.

In our view it is indiscreet, in dealing with the masses, to urge them to open the door for what we may, for the moment consider to be a lesser evil. For when one rule or healthy tradition is *broken* we must remember that others are invariably *weakened*.

'Parties' and what they stand for, have their own limitations. "If I could not go to heaven but with a party, I would not go there at all" said Thomas Jefferson, the architect of the American Declaration of Independence (1776).

Development Councils, although constituted on a party basis are in a sense above party politics. They are as Dr. Neelan Tiruchelvam has pointed out "*the collective conscience of the District*".

The focus of this vision should not be lost on the nation, far above and beyond the, chronology of political events in Sri Lanka.

**Correction**

In our Editorial of 22-5-11 on Asia Sunday, there is an error in page 4. The word 'stripas' should read *stupas*.

## New CSI Bishop

*Rev. M. C. Mani*, a member of the working Committee of the C. S. I. Synod and Clergy Secretary of the Diocese was consecrated and installed as the Bishop of the Madya Kerala Diocese on Sunday 8-2-81 at the Holy Trinity Cathedral, Kottayam.

This is the first time in Kerala that the three Churches — CSI, CNI and the Mar Thoma Church had joined togther in the rites for the consecration of a Bishop.

The 53 year old Bishop succeeds Rt. Rev. T. S. Joseph who retired on attaining the age of 65. He is the 9th in the line of prelates.

The most Rt. Rev. Solomon Doraiswamy, the Moderator of the CSI led the Consecration at the altar of the 140 years old cathedral built by Benjamin Bailey the Pioneer CMS Missionary.

The Moderator was assisted by the Most Rev. R. S. Bhandare the Moderator of the CNI and the Most Rev. Thomas Mar Athanasius, Suffragan metropolitan of the Mar Thoma Church. The Rt. Rev. K. C. Seth, Bishop in North Kerala preached the Sermon.

A civic reception was accorded to the new Bishop at CMS College Hall.

## Living in Christ with People
## Seventh Assembly of the CCA

**Theme**

The Seventh Assembly of the C. C. A. took as its theme 'Living in Christ with People' and considered various aspects of that theme as it related to the life and struggles of Asia's peoples. The keynote of the addresses of the Presidium consisting of 4 Church leaders was presented by Mrs. Chithra Fernando, the Sri Lanka Member of the Presidium. The General Secretary, Dr. Yap Kim Hao's address was also based on the theme. The Conference considered how the Churches were called to live in Christ with the peoples of the Asia as they confronted the structures of power, as they strove to establish a truly human community and to meet the emerging challenges in this continent. The Church's renewal was seen as a key to the Church's faithfulness to its calling in Asia.

**The Church and Human Rights**

The Assembly reviewed the work of the last 4 years since the Sixth Assembly in Penang in 1977. The Assembly noted with regret the growing tendency towards authoritarianism and even military regimes throughout the countries of Asia. Security and development, it was noted, were being used often as the excuse for the denial. of human rights The Church in Asia has the task to bear witness to the fulness of the human being as envisaged by God for all peoples. The Churches have to be always vigilant to speak up for freedom and human rights as basic for any form of society which claims to be truly human.

**The Assembly addresses**

Only two of the planned D. T. Niles Memorial lectures were delivered during the Assembly. The first was by the Rt. Rev. Lakshman Wickremasinghe whose address in his absence was read by Dr. Preman Niles. The second was by Dr. Choen - Seng Song of Taiwan and presently an Associate General Secretary of the Faith and Order Commission of the World Council of the Churches. Both the lectures tried to relate the main theme of the Assembly to deep rooted traditional religious concepts from their own cultural backgrounds. They were both an excellent attempt to restate 20th century Christian faith through traditional Asian concepts.

The high point of the Assembly was the challenging and stimulating address delivered by the Rev. Torre, a Roman Catholic theologian who was only recently released from a 5 year prison sentence in the Phillipines. His message which was shaped by his experience in the struggle of the Phillipine peasants was most relevant and challenging. The Rev. Torre asked that the Church should match its vague ideals with clear visions, a vision of people truly liberated and set free in Christ. To be with the people is truly to participate in the death and resurrection of Christ.

The Assembly sessions were held in the large new Auditorium of Bishop Cotton's Girls School. Since the delegates were housed in various hotels in the city, it was a pity a fine opportunity for greater fellowship and understanding was lost. The Assembly however, proved to be one more milestone in the growing consciousness of the unity of God's people in Asia.

## Dwight Eisenhower and Omar Bradley

General Omar Bradley, the last of the great American generals of World War II, passed away in April at the age of 88. He graduated from West Point along with Eisenhower in 1915. Out of a class of 164 thirty rose to be generals in the war. It has been called a class upon which the stars fell.

Bradley was called upon to lead the American First Army through the Normandy invasion, the success of which spelt the doom of Hitler's Germany. Immediately afterwards Bradley became Commander of the Twelfth Army consisting of 1,300,000 troops which constituted the largest American force ever to come under one man's command. With this army Bradley led the sweep across the Rhine.

At the Annual Commencement (Convocation) of the Columbia University held on June 1, 1949 Eisenhower, as President of the University, conferred honorary degrees on several distinguished men and women among whom were Hermon Muller, Nobel Prize Winner and explorer in the field of heredity, Charles Wilson, the Industrialist, Helen Reid, Champion of Women's Suffrage and Education, Arnold Toynbee, the Historian and General Omar Bradely, the soldier. Eisenhower addressed Bradley as "My comrade on the greatest battle field of America". As I listened to these words I felt it was a touching tribute and a terse summing up of the intimate association of the two men in the intrepid adventure of war against a formidable enemy. America saved the war and, what is more, they also saved the peace through the Marshall Plan named after General George Marshall.

This was said to be a war to end all wars. But it is said to reflect that there has been a crop of wars, though undeclared all over the world since then and there does not seem to be any silver lining in the cloud. "The darker the world and the deeper the virus of hate, the more glowing must be our Christianity and the more triumphant the note of our faith".

**I. P. T.**

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./100125/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road Jaffna, at Sri Saamuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 29th May, 1981.